2[illegible] AUG 1924

உ



ஸ்ரீராமஜெயம்

வீரபோகவாந்தராய நமா:

கலியுகத்தின் மகுத்துவமாகிய

# காலக்கியானம்

இவை போத்சலூர்

வீரபிரம அவர்களால்

தெலுங்கு பாஷையில் அருளிச்செய்ததை

திருவநகரில் வசிக்கும் திருக்கன்னையர் குமாரர்

அனந்தசுப்பையனால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க

சர்பத்ஷாப் நா, கதிர்வேலுபிள்ளை அவர்களால்

திருச்சினாப்பள்ளி

கணபதி அச்சேந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

...ஞ்சந்தை பாய்க்கடைவீதி திருச்சி 15-8-24

உ

சிவமயம்



21 AUG 1924

3269

# கலியுக மகுத்துவமாகிய காலக்கியானம்

சுபம்பெற்று ஆக்ஷேமம்பெற்று சந்திரவடிவம்பெற்று
நயம்பெற்று நன்மைபெற்று நல்லருளொடு பெற்று
பயம்அற்று மலமு மற்று பார்ப்பர் மேன்மைபெற்று
ஜெயம்பெற்று செல்வம்பெற்று சிறப்பாய்ப்பெற்று வாழ்வீர்

இஃது

போத்தலூர் வீரபிரம அவர்களால் தெலுங்கு பாஷையில் அருளிச்செய்ததை திருவநகரில் வசிக்கும் திருக்கண்ணையர் குமாரர் அனந்தசயனையரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மதுரை சிறூர் பனியில் க. மு. மதுரை படையாச்சியார் புத்திரர் வீரபடையாச்சி அவர்களால் 1915 ஞு அக்டோபர் மீ 4உ சதிபீட்டர் மேஸ்திரியார் ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்த பிரதிக்கிணங்க, திரிசிபுரம் நான்காவது பட்டாளம் காஜாப்பேட்டை தி. நாராயணசாமி நாயுடு குமாரர் திருவேங்கடசாமி நாயுடு அவர்களாலும் இன்னும் பலர் சேர்ந்து 1922-ம் ஞுத்தில் திருச்சி தென்னூர் பால ரகுவிலாஸ் பிரஸில் பதிப்பிக்கப்பட்ட பிரதிக்கிணங்க திரிசிபுரம் [illegible] மகா-ள-ள-ஸ்ரீ க. சு, க. அண்ணாமலை மேஸ்திரியார் அவர்களும் [illegible] தார் வியாபாரிகளும் சேர்ந்து ரங்கவிலாஸ ஸ்ரீ [illegible] பிரஸில் பதிப்பித்த பிரதிக்கிணங்க ஆனந்தபுரம் எண்ணெய் வியாபாரம் மு. க. [illegible] அவர்களின் பெருமுயற்சியால் கீழ்கண்ட பேர்வழிகளின் பொருளுதவியால் கோயமுத்தூர் முடிவியாபாரக்கம்பெனி பி. கிருஷ்ணசாமிநாயுடு [illegible] மஸ்தர் எஸ். கே. சுப்பாமணியரும் ஆனந்தபுரம் பெ. [illegible] புரம் ஜில்லா சத்திரெட்டியபட்டி வெ. சக்ரசாமி ஆசாரி ஆனந்தபுரம் [illegible] கடை வெ. கோபால்கோனார் ஷெ தெருவு மருதைப்பிள்ளை ஆனந்தபுரம் துரைசாமி பிள்ளை ஷெ தெருவு [illegible] சாமிப்பிள்ளை [illegible] அவர்கள் ஆகிய எங்கள் எங்கள் பொருளைச் செலவு செய்து தரும [illegible] முன்னிட்டு 1000 பிரதிகள் பதிப்பித்திருக்கின்றது.

# சரித்திர வரலாறு

ஸ்ரீ கௌதம தீர்த்தத்திற்கடுத்த கேதாரவனத்திலே இருக்கும் குகைக்குள்ளாக அநேக காலம் தவசாய் நின்ற மஹாத்மாக்கள் ஸ்ரீ சிதம்பர தீக்ஷதர்க்கும் ஸ்ரீ ராமயோகி ஐயருக்கும் ஸ்ரீ வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தை யுபதேசித்து நீங்கள் இந்த உலகத்திருக்கிறவர்களுக்குப் போதித்துப் பிரசங்கம் செய்யுங்களென்று ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே ஸ்ரீ சிதம்பர தீக்ஷதரும் ஸ்ரீ ராமயோகி ஐயரும் துன்முகி ௵ வைகாசி மீ 2௳ திரயோதசி வியாழக்கிழமை இந்த சுபதினத்தில் இந்த சௌதன்னியப் பத்திரிகையைப் பிரசுரித்தார்கள். ஸ்ரீ கணபதியே நம:

ஓர் நாள் தேவேந்திர மஹாராஜாவானவர் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகளையும். சகலமான தேவர்கள் முதலானயாவர்களையும் தம்முடைய தெய்வசபைக்கு அழைப்பித்து தேவர்களைப்பார்த்து ஓர் வசனம் சொல்லுகிறார்

ஓ தேவர்களே! பூலோகத்திலே துஷ்டர்கள். தனதான்யசம்பத்துகளால கர்வமடைந்து பெரியோர் சிறியோரென்று மரியாதையில்லாமல் வம்பு தும்பகளான வார்த்தைகள் பேசுகிறதும் சஜ்ஜனங்களைத் தூஷிக்கிறதும் இப்படி துஷ்டர்கள் அதிசரித்து தானதருமங்கள் முதலான விஷயங்களையும் நல்லோர்கள் பெரியோர்கள் பத்தினிமார்க்களுமாயிருக்கிற தாய்மார்களையும் எண்ணாமல் நடக்கிறபடியால் பூமியில் பாவம் எட்டுபங்கும் புண்ணிய ஒரு பங்குமாயிருக்கிறது அதனாலே பூமிதேவியானவள் பாரஞ்சுமக்கமாட்டாமல் முறையிடுகிறாள். இதற்கு என்னசெய்வோமென்று தேவர்களைப் பார்த்து தேவேந்திரமகாராஜா கேட்க அதற்குத தேவர்களெல்லோரும் ஒருமித்துச சொல்லுகிறார்கள் வாருங்களய்யா தேவேந்திரமகாராஜாவே தங்களுக்குத் தெரியாத யோசனைக்கு எங்களிடத்தில் என்னவிருக்கிறது, ஆனால் எங்களுக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுகிறோம்.

இந்தகலியுகத்தில் இதுவரையில் பாவம் அதிகமில்லாமலிருந்தது இப்பொழுது துஷ்டர்கள் அதிகமானபடியால் பாவமதிகமாயிற்று ஆகையினாலே அந்த துஷ்டர்களைச் சம்மாரஞ்செய்ய மும்மூர்த்திகளாலேயாகுமேயொழிய மற்ற பேர்களாலேயாகாது. அப்படியிருப்பதால் உங்களுடைய திருவுளத்துக்கேற்றபடியே நடவுமையாவென்று தேவர்கள் சொல்லக்கேட்டு தேவேந்திரமகாராஜா சொல்லுகிறார் ஓ. தேவர்களே. பூமியிலே துஷ்டர்கள் அதிகமானால் அவர்களை சம்மாரஞ்செய்து பூமிபாரந்தீர்க்க ஸ்ரீமஹாவிஷ்ணுவே அவதாரஞ்செய்ய வேண்டுமே தவிரவேறில்லை.

உ

ஸ்ரீதேவி சகாயம்.

# கலியுகத்தின் மகுத்துவமாகிய காலக்கியானம்.

## காப்பு வெண்பா

நல்லவிநாயகரை நாள்தோறுமே தொழுதால்
அல்லல் வினையெல்லா மகலுமே——சொல்லரிய
வீரவசந்தமா சேருவென்னு மிப்பொருளாம்
சீரதனை யெப்பொழுந் தேற்று

## துதி

ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியே நம:
ஸ்ரீ வீரபோக வசந்தராய நம:
ஸ்ரீ சிசம்பர தீக்ஷிதரே நம:
ஸ்ரீ இராமயோகி ஐயரே நம:
ஸ்ரீ கனகதுர்க்கையம்பாள் நம:

## ஆசிரிய விருத்தம்

சீர்பெற்ற உலகெல்லாம் இருளற்று தெளிபெற்ற
ஸ்ரீவிஷ்ணு அவதாரமாய்
ஜெகதலம் புகழ்பெற்ற காஷ்மீர தேசத்தில்
திலர்தம்பாள் கெற்பமதனில்
பேர்பெற்று வாழ்க்கவே பிள்ளையாய்ஜென்மித்து
பூமிதனிலே பிறந்து
பெரியோர்க ளாதரவில் சப்பன்ன பாஷைகள்
பிரபல்யமாய் படித்து
பார்பெற்ற மகேந்திரகிரி பர்வதத் தடியினில்
[illegible] சமைத்தபின்பு
பாராசு பெற்றமணி முடிசூடி குடையினில்
பாருலகை யாளுமன்னன்
கார்பெற்ற முகில்வண்ண வீரபோக வசந்த
கருணைகடாக்ஷ பெருளை
கண்டவர் படித்தவர் கருத்தினில் நினைத்தவர்
கதிர்போல் வாழ்குவரே.

# சரித்திர வரலாறு

ஸ்ரீ கௌதம தீர்த்தத்திற்கடுத்த கேதாரவனத்திலே இருக்கும் குகைக்குள்ளாக அநேக காலம் தவசாய் நின்ற மஹாத்மாக்கள் ஸ்ரீ சிதம்பர தீக்ஷதர்க்கும் ஸ்ரீ ராமயோகி ஐயருக்கும் ஸ்ரீ வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தை யுபதேசித்து நீங்கள் இந்த உலகத்திருக்கிறவர்களுக்குப் போதித்துப் பிரசங்கம் செய்யுங்களென்று ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே ஸ்ரீ சிதம்பர தீக்ஷதரும் ஸ்ரீ ராமயோகி ஐயரும் துன்முகி ௵ வைகாசி மீ 2௨ திரயோதசி வியாழக்கிழமை இந்த சுபதினத்தில் இந்த சௌதன்னியப் பத்திரிகையைப் பிரசுரித்தார்கள். ஸ்ரீ கணபதியே நம:

ஓர் நாள் தேவேந்திர மஹாராஜாவானவர் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகளையும், சகலமான தேவர்கள் முதலானயாவர்களையும் தம்முடைய தெய்வசபைக்கு அழைப்பித்து தேவர்களைப்பார்த்து ஓர் வசனம் சொல்லுகிறார்

ஓ தேவர்களே! பூலோகத்திலே துஷ்டர்கள், தனதான்யசம்பத்துகளால கர்வமடைந்து பெரியோர் சிறியோரென்று மரியாதையில்லாமல் வம்பு தும்புகளான வார்த்தைகள் பேசுகிறதும் சஜ்ஜனங்களைத் தூஷிக்கிறதும் இப்படி துஷ்டர்கள் அதிசரித்து தானதருமங்கள் முதலான விஷயங்களையும் நல்லோர்கள் பெரியோர்கள் பத்தினிமார்க்கமாயிருக்கிற தாய்மார்களையும் எண்ணாமல் நடக்கிறபடியால பூமியில் பாவம் எட்டுபங்கும் புண்ணிய ஒரு பங்குமாயிருக்கிறது அதனாலே பூமிதேவியானவள் பாரஞ்சுமக்கமாட்டாமல் முறையிடுகிறாள். இதற்கு என்னசெய்வோமென்று தேவர்களைப் பார்த்து தேவேந்திரமகாராஜா கேட்க அதற்குத் தேவர்களெல்லோரும் ஒருமித்துச சொல்லுகிறார்கள் வாருங்களய்யா தேவேந்திரமகாராஜாவே தங்களுக்குத்தெரியாத யோசனைக்கு எங்களிடத்தில் என்னவிருக்கிறது, ஆனால் எங்களுக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுகிறோம்.

இந்தகலியுகத்தில் இதுவரையில் பாவம் அதிகமில்லாமலிருந்து இப்பொழுது துஷ்டர்கள் அதிகமானபடியால் பாவமதிகமாயிற்று ஆகையினாலே அந்த துஷ்டர்களைச் சம்மாரஞ்செய்ய மும்மூர்த்திகளாலேயாகுமேயொழிய மற்ற பேர்களாலேயாகாது. அப்படியிருப்பதால் உங்களுடைய திருவுளத்துக்கேற்றபடியே செய்யுமையாவென்று தேவர்கள் சொல்லக்கேட்டு தேவேந்திரமகாராஜா சொல்லுகிறார் ஓ. தேவர்களே. பூமியிலே துஷ்டர்கள் அதிகமானால் அவர்களை சம்மாரஞ்செய்து பூமிபாரந்தீர்க்க ஸ்ரீ மஹாவிஷ்ணுவே அவதாரஞ்செய்ய வேண்டுமே தவிரவேறில்லை.

நாமந்த ஸ்ரீமந் நாராயணரிடத்தில் போய் சொல்லிக்கொள்வோம் வாருங்கள் தேவர்களேயென்று சொல்ல, அப்பொழுது தேவர்களெல்லோரும் தேவேந்திர மகாராஜா முதலானவர்களும் கூடிக்கொண்டு வைகுந்தம் போய் ஸ்ரீமஹாலக்ஷ்மி ஸமேதரான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து சுவாமி பரமபுருஷா அகிலாண்டநாயகா ஆதிபரப்பிர்ம வஸ்துவே என்று தேவேந்திரன் முதலான தேவர்களெல்லோரும் ஸ்தோத்திரஞ்செய்து கொண்டு நிற்கையில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் தேவேந்திரனையும் தேவர்களையும் பார்த்து நீங்கள் என்ன காரணமித்தமாய் இவ்விடத்திற்கு வந்தீர்களென்று திருவுளம்பற்ற தேவர்கள் சொல்லுகிறார்கள். ஓ. பரமபுருஷா பரப்பிர்மவஸ்துவே ஆதிமூலமே அநாதரக்ஷகா சர்வலோக தயாபரமூர்த்தியே பூலோகத்திலே கலியுகமானபடியால் துஷ்டர்கள் திகமாகி மதத்தோன்மத்தராய் கர்வமடைந்திருக்கிறார்கள். அதுவுமல்லாமல் சர்வ வல்லமையுடைய ராச்சியமாயிருக்கிறது. சில ராஜர்கள் நீதியில்லாமல் அநீதியாய் ராச்சியமாளுகிறபடியால் பூலோகத்தில் பாவம் எட்டுபங்கும் புண்ணியம் ஒருபங்குமாய் நடந்து வருகிறது அப்படியிருப்பதால் பூமிதேவி பாரம் பொறுக்கமுடியாமல் முறையிடுகின்றனள்

இந்த கலியுகமென்பது நாலு லக்ஷத்து முப்பத்திரண்டாயிரம் வருஷம் அதில் இதுவரையில் சென்றது நாலாயிரத்து தொளாயிரமானதால் அதற்குள் பாவம் எட்டுபங்கும் புண்ணியம் ஒருபங்குமானபடியால் பூமிதேவி பாரம் பொறுக்கமுடியாமல் முறையிடுகின்றாளென்று தேவர்கள் சொல்ல அதைக்கேட்டு வைகுந்தநாதராகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் திருவுளம் பற்றுகிறார்;

ஓ. தேவேந்திரனே நீங்கள் சொல்லுகிறது சரிதான் ஆனால் பூலோகத்திலே ஜெனிப்பித்து துஷ்டர்களைச்சம்மாரஞ் செய்து பூமிபாரந் தீர்க்கிறேன் நீங்கள் அதைப்பற்றி கிலேசப்படவேண்டியதில்லையென்று சொல்லி பகவானை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் அப்பொழுது காமேஸ்வரனுக்கு ஆக்கினை செய்ய அவரும் கருணைகூர்ந்து பிரமதேவனை வரவழைத்து மும்மூர்த்திகளும் கூடியிருக்கின்றபொழுது ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொல்லுகிறார் ஓய் புண்ணியபுருடர்காள் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணி பூமிபாரந்தீர்க்கும் பொருட்டாய் பூலோகத்திலே போய் காஸ்மீரதேசத்து இராஜாவாகிய தர்மராஜா வம்சத்திலே பிரதிராஜனென்ற ஜெயசிங்கு மகாராஜாவுக்கு பத்தினியாகிய இலக்ஷ்மியம்மாளென்கிற பதிவிரதை வயிற்றிலே பிறக்கிறேன் நீங்களிருவரும் நமக்கு ஒத்தாசையாகி பூலோகத்திலே உங்களுக்கு தகுந்த பிர்ம ருத்திர வம்சத்திலே பிறந்து சம்முகப்பட இருப்பிடத்திற்கு வந்துசேருங்களென்று

சொன்னார். அப்படியே பிரமாவானவர் பிரமகுலத்திலே பிறந்து ராமயோகி யென நாமதாரணைப் பெற்றுவாழ்ந்து கொண்டிருந்தார் ஸ்ரீசாம்பசிவன் மூக்கோடி கிருமத்திலே ருத்திரவம்சத்தில் சிதம்பர தீக்ஷதராகவும் அவதரித்தார்கள் உடனே அந்த கபடநாடக சூத்திரதாரியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் அங்காதேவியாண சக்தியையழைத்து நீ துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யும் பொருட்டு பூலோகத்திலே பிறக்கவும் மற்ற தேவர்களை பரிவாரங்களாகவும் பிறக்கும்படி கட்டளையிட்டு தேவர்களை தங்களிடத்திற்குபோக உத்தரவு செய்தார். உடனே அந்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் அந்தக்ஷணமே காஸ்மீரதேசத்தரசரான ஜெயசிங்கு மகாராஜாவுக்கு ஆக்கிரமித்து பாரியாளான திலர்த்தமையம்மாள் கெற்பத்தில் உற்பத்தியாகி முப்பத்திரண்டு லக்ஷணங்களுடன் சுபதினத்தில் சாதாரண(ஹு) தையீ 20உ குருவாரத்தில அவதரித்தார். அவரைப் பார்க்குமிடத்தில் கோடி சூரியபிரகாசம் போலிருந்தார். நக்ஷத்திரங்களெல்லாம் சுபஸ்தானத்திலேயிருந்தது அந்தபகவான் பிறந்து சிலநாளைக்குப்பின்பு பெரியோர்களைக்கண்டு தரிசிக்கவேண்டுமென்ற கருத்துண்டாகி அப்பாலகன் ஏகமாய்புறப்பட்டு சோணியதேசத்து கெளதம தீர்த்தத்திற்கடுத்த சோதாபுரி ஆரண்யமான பத்திரிகேதார வனத்திலே வருகையில் ஓர்குகையைக் கண்டு அந்தக்குகைக்குள்ளாகப்பார்க்க அநேகர்களாய்க கண்ணை மூடிக்கொண்டு தபசு செய்கிற மகாத்துமாக்களைக்கண்டு அவர்கள் பாதத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம்செய்து கைகளை கட்டிக் கொண்டவர்கள் எப்போது கண்ணைவிழிக்கிறார்களோ என்று வெகு பயபக்தி விசுவாசத்துடனே நின்றார் அந்த மகானுபாவரான முனிஸ்வரர்கள் நெமிஷ்டை முடித்து கண்ணைத் திறந்து முன்னுலே நிற்கப்பட்ட பாலகுமாரனைக்கண்டு இந்த பாலகன் யாரென்று தங்களது ஞான திருஷ்டியினாலே பார்க்குமிடத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தானே பூமிபாரந்தீர்க்கும் பொருட்டு பூலோகத்திலே அவதரித்து இருக்கிறாரென்று அவருடைய வரலாற்றை நன்றுயறிந்து அந்தப்பாலனை பூசித்து ஓய் ராசகுமாரகா நீ இந்த பூலோக்கத்தை ஆளுகிற நிமித்தம ஸ்ரீமந்நாராயண மூர்த்தியினுடைத அம்சையினாலே காஸ்மீரதேசத்து ராசாவாகிய ஜெயசிங்கு புத்திராய் ஜெனித்த நீர் இந்த ஐந்நாறுகோடி பூமண்டலமும் ஒரு குடையின் கீழ் ஆளப்போகிறீர். உம்முடைய நாமதேயம் வீரபிரமம் என்று சாற்றினார்கள்.

அப்போது அந்தபாலகன் ஓ முனிஸ்வரர்களே ஸ்வாமி என்மேரில கருணைகடாக்ஷம்வைத்து சகல வித்தைகளும் சம்பன்னபாஷைகளும் நாலுவேதமுதலான சாஸ்திரங்களும் உபதேசித்தருளவேண்டுமென்று கேட்க அதற்கு முனிஸ்வரர்கள் சந்தோஷப்பட்டு

அப்படியே ஆகட்டுமென்று சகல வித்தைகளும் கற்பித்துக்கொடு
க்க, பாலகன் அப்படியே வித்தியாப்பியாசம் செய்து வந்தார்.

சிலநாளைக்குமுன்னமே பிர்மதேவரும் ஸ்ரீசாம்பசிவனும் காசிமா
நகரத்தில் பிரம்மாவானவர் பிர்மகுலத்திலேபிறந்து இராசயோகிஐய
ரென்று நாமகரணம்பெற்று வளர்ந்துக்கொண்டிருந்தார் ஸ்ரீசாம்ப
சிவனனவர் நந்தி ராச்சியத்திலே பூசைநகரத்தைச்சார்ந்த முக்
கோடி கிருமத்தில் ருத்திரவம்சத்திலே பிறந்து சிதம்பர தீக்ஷக
ரென்று நாமகரணம்பெற்று வாழ்ந்துகொண்டிருந்தார் அப்படியிருக்
கின்றபொழுது, ஓர் நாள் இராமயோகி ஐயரிடத்திற்கு நாரதமா
முனீஸ்வர் வந்து ஓய் ஸ்ரீராமயோகி ஐயரே, அகிலாண்டகோடிபிர்
மாண்டநாயகரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் காஸ்மீரதேசத்
து ராஜாவான ஜெபசிங்கு புத்திரராக ஜெனித்து அங்கேயிருந்து
சிலநாளைக்குப்பிறகு ஈசானிய தேசத்திலே கௌதம தீர்த்தத்திற்கு
அருகாமையிலிருக்கிற கோதாவரி ஆரண்யமான பத்திரி கேதார
வனத்திலே ஒரு குகையைக்கண்டு அதில் தபசு செய்கிற இரண்டு
யுகாந்தகாலத்து முனீஸ்வரர்களிடத்திற்குப்போய் நாலுவேதசாஸ்தி
ரங்களும் வில்வித்தைமுதலான சம்பன்ன பாஷைகளும் அப்பியா
சஞ்செய்துக்கொண்டிருக்கிறாரென்று நாரதமகா முனீஸ்வரரான
வர் விபரமாய் சொல்லிவிட்டு அவர் எதாஸ்தானம் போய்சேர்ந்தார்

அதுகேட்டு இராமயோகி ஐயரானவர் நாரதர் சொல்போலே
அந்தக்ஷணமே எழுந்திருந்து சிதம்பரதீக்ஷதரிடத்திற்குப் போ
கும்போது அவர் எதிரே வரக்கண்டு இராமயோகிஐயர் சிதம்பர
தீக்ஷதரைப் பூசித்து நமஸ்காரஞ்செய்ய சிதம்பரதீக்ஷதரும் எதிர்
நமஸ்காரஞ்செய்து ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய பிறப்பும்
அவ்விருப்பிடமும் நாரதர்சொன்னபிரகாரம் சிதம்பர தீக்ஷதருக்
குச் சொல்ல, அவர் சந்தோஷப்பட்டு நாமிருபேரும் அந்தப்பக
வான் வித்தையப்பியாசஞ் செய்யுமிடத்திற்குப்போய் அவ்விடத்தி
லிருக்கிற திவ்விய தேஜஸ் உள்ள மூர்த்தியாகிய பாலகுமாரனையும்
முனீஸ்வர மகாத்துமாக்களையுந்தெரிசித்து அவர்கள்சொற்படி நட
ப்போம் வாருமையா இராமயோகி ஐயரே என்று சொல்லி இரு
பேரும் கோதாரவனத்திற்கு வந்து அவ்விடத்திலே அனேக கால
மாக தபசுசெய்கிற முனீஸ்வரரைக்கண்டு தெரிசினஞ்செய்து நிற்
கயிலவர்களிடத்தில் கோடிசூரியப்பிரகாசம்போலமுப்பத்திரண்டு
லக்ஷணங்களுடனே விளங்குகின்ற பகவனைப்பார்த்து இந்த
அருட்பிரகாசமான பாலகன் யாரென்றும் இந்த பிலத்துவாரத்தி
லேயிருக்கிற காரணமென்னவென்றும் முனீஸ்வரர்களைக் கேட்க
அந்தமுனீஸ்வரர்கள் அனுக்கிரகஞ்செய்கிறார்கள் இந்தச் சிறுபிள்ளை

யாகிய பாலன் பூமண்டலமுழுதும் ஆளுகிற நிமித்தமாய் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய அம்சையினாலே காஷ்மீர தேசத்து இராஜாவாகிய ஜெயசிங்கு மகாராஜாவின் ஸ்திரியாகிய திலர்த்தமையம்பாளென்கிற பதிவிரதை கெர்ப்பத்தில் உற்பத்தியாகி எங்களிடத்தில் வந்து வீரபோகவசந்தராயனென்று பேரும்பெற்று நாலு வேதமுதலான சகல வித்தைகளும் சம்பன்ன பாஷைகளும் அப்பியாசஞ்செய்துகொண்டிருக்கிறார். ஸ்ரீ இராமயோகி ஐயரே நீர் யாரென்றால் பிர்மாவாகவும் சிதம்பர தீக்ஷிதரே நீர் யாரென்றால் ஸ்ரீசாம்பசிவனாகவும் இந்த பூமிபாரந்தீர்க்குங் காரணமாய் வீரபோகவசந்தராயரு நீங்களிருவரும் திருமூர்த்திகளானபடியினாலே பூலோகத்தில் வந்து பிறந்திருக்கிறீர்கள் இன்னும் கொஞ்சநாளைக்குள்ளே பூமண்டலமெல்லாம் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியான வீரபோகவசந்தராயர் துஷ்டரை சம்மாரம் பண்ணி பஞ்ச சதகோடி பூமண்டலமெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆளப்போகிறார் அதற்கு முன்பாக துஷ்டர்கள் அசுபவ நக்ஷத்திரகுள்ளாக நசித்துப்போவார்கள் புண்ணியவான்கள் அவர்பாத தரிசனங்கண்டு மகாபாக்கியம் பெற்று சுகமாய் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

ஆனால் அந்த துஷ்டர்கள் எப்படி நசித்துப்போவார்களென்றால் சொல்லுகிறோம் அந்தந்ததேசங்களிலே சகலவியாதிகளடைந்து சிறிதுபேர்கள் நசித்துபோவார்கள் அதுவுமல்லாமல் அன்னியோன்னிய மித்துருத்வத்தினாலே சத்துருக்களினாலேயும் மித்துருக்களாலேயும் சிறிதுபேருக்கு அவதியும் பாதகங்களதிகமாயும் அதற்காக கனகதுர்க்கையம்பாளென்கிற சத்தியானவள் பூமியிலே பிறந்து உக்கிரங்கொள்ளுகிறாள் அந்த உக்கிரத்தினாலேயும் மத்தமலைகளினுடைய உச்சியில் புகையான எரிச்சலால் சிறிது ஜனங்கள் நசித்து போவார்கள். சிவன் விஷ்ணு ஆலயமுதலான தேவாலங்களிருந்தும் தேவதைகளும் மூர்த்திசொருபமாயெழுந்திருந்து அதிக உக்கிரங்கொண்டு அந்தந்த கிராமங்களில் நடனமாடுவார்கள் அதனாலே பாவிகள் மனது சஞ்சலப்படுவார்கள் மல்லிகார்ச்சுன சுவாமி மனிதரிடத்தில்பேசுவார். அப்பொழுது கல்மழையினாலே சிலபேர்கள் நசித்துப்போவார்கள் காஞ்சிபுரம் காமாச்சியம்மன் உக்கிரங்கொண்டு தக்ஷிணதேசத்தில் மனிதர்களையும் குழந்தைகளையும் சம்மாரஞ்செய்வாள் அப்போது தட்சணத்திலுள்ள மனிதர்கள் பாவதோஷங்கள் அதிகமாகச்செய்வார்கள் அந்தப்பாவங்களை சம்மாரஞ்செய்யும்பொருட்டாய் கதிர்காமதேசத்து கரும்பாய்புண்டாகி துஷ்டர்களை நஷ்டம்பண்ணும் கர்னாடகதேசத்திற்கு காளிகா தேவியும் துலுக்கர்தேசத்திற்கு லக்ஷாதேவியென்கிற துர்க்கையும் மகேந்திரதேசத்திற்கு யாதேவியும் கண்ணடராஜ்யத்திற்குப் பத்திரகாளியும் மத்திமதேசமான தமிழ்தேசத்திற்கு வீரபத்

சுவாமியும், கல்கி ராச்சியத்திற்கு நாமகர்த்தனும் இந்திரபாம்பு
மாய் அநந்ததேவதைகள் நாலுதிக்கிலும் உக்கிர ரூபங்கொண்டு
வருவார்கள் அப்படிவரும்பொழுது கஷ்டர்கள் பெரியோர்கள் சிறி
யோர்களுடைய வாய்களிலே கிருமிகள் விழுந்து தலைமண்டைகள்
வெடித்து நின்றவிடத்திலேமாளுவார்கள் இந்தப்பிரகாரமாய் ஐநூறு
கோடி பூமண்டலத்துக்கு பாம்புஉண்டாகி டவைத்தமாய் சிசு
முதல் விருத்தாப்பியமுள்ளவர்கள் வரையில் மேல்விஷக்கூச்சி விழு
ந்து நஷ்டமாவார்கள் அப்போது மந்தரகிரியேயும் பூங்காவன
முதலான இடங்களிலேயும் சாகமே கூப்பிடும் வித்தைகளதிகமா
யிருக்கும் மரிகள் பிராந்தால், ஆக்ஞைகள் நாலுஜாமத்திலுமே இர
வும் பகலும் ஓயாமல் கூப்பிடும் ஆகாசத்திலே பகலில் நக்ஷத்தி
ரங்கள் காணப்படும் லோகத்திலே அநேக கன்தில் நடக்கும் மே
லும் நாலுதிக்கிலும் அந்தகாரமாம் ஆகாசத்திலும் அரகரவென்
று வெகுசப்தமாய்த் தொனி பிறந்து திடீரென்று கேட்கப்படும்
அந்த சத்தத்தினாலே சிறிது பேர்கள் நஷ்டப்படுவார்கள் ஜலத்
திலே இருக்கிற நீர்வாழ் ஜீவஜந்துக்களெல்லாம் லோகத்திலே வந்
து பிறந்து பூமியிலே சேர்ந்தோம் சேர்ந்தோமென்று கூப்பிடும்
கைலாசத்திலேயிருந்து ஒருமுகமாய் கூடிவந்து திவ்வியமான கோ
விலிலேபுகுந்து எட்டு நாளிருந்து ஆடும் கூத்தல் கூப்பிடும்
மறுபடி மாயமாய்ப் போகும் சத்திக்கை புலியாய் வந்து சில துஷ்டர்
களைக் கொல்லும் பின்னும் கோவில்களிலே ஒரு முதலை புகுந்து
கொண்டு மனுஷாளை மிகவும் கொல்லும். குமாரசாமி கோவிலிலே
ஏழுநாள் வரைக்கும் கதவை மூடிக்கொண்டு திறக்காமலிருக்கும்
பெருங்காற்று விசையாயடிக்கும் அதனாலே சிலதுபேர்கள் மடிந்து
போவார்கள். சூரியமண்டலத்திலேயிருந்து தளதளவென்று ஓர்
இடி விழும், அந்த இடியினாலே ஆரணி பேனூர் நாசமாய்ப்போ
கும். வெங்கடாஜலபதிகோவிலிலே முதலை புகுந்து கூத்தாடும் மே
லாசத்திலிருந்து ரீங்காரமாய் ஒரு சத்தம் பிறக்கும், அந்த சத்தத்
தினாலே லோகத்திலேயிருக்கிற ஜனங்களெல்லாம் நடுநடுங்குவார்
கள் தேவாலயங்களிலிருக்கிற கெருடத்வஜங்களெல்லாம் முறிந்து
நாலுதிக்கிலும் சிதறிவிழும் திருவாலூர் வீரபாகு சுவாமிக்கு
வேர்வையாகும் அப்போது ஜனங்களெல்லாம் நஷ்டமடைவார்கள்
மல்லிகார்ச்சுனசுவாமி நேத்திரத்திலே நெருப்பாகும் அப்போது
சுவானம் கடகடவென்று கூப்பிடும் அதனாலே ஆகாசதேவதைகள்
ஜோக்கினாலே சத்தம்பிறந்து சிறிதுஜனங்கள் நஷ்டப்படுவார்கள்
சிவன் சடைமுடி அவிழ்ந்துவிசி 8 நாள்கழித்து தரணியிலேவிழும்
அதனாலே சிலஜனங்கள் நஷ்டமார்கள் திருப்பதி வெங்கடாஜல
பதிசுவாமி கோவிலிலே மகாலெட்சுமி புகுந்து அவளுடைய மாய்
கை வசத்தினாலே சிம்மம்பிறந்து ஜெகமெங்கும் நடுநடுங்கும் அத
னால் சிறிது பேர்மடியவே நாலுதிக்கும் ஆருதிக்கும்.

திருவள்ளுவராகப் பிறந்து அவருக்கு வேர்வையாகி அதனாலே சிறிது ஜனங்கள் நஷ்டமாவார்கள் லக்ஷ்மிதேவி கண்களிலிருந்து ஜலம் வடியும் விநாயகர் வேதமந்திரம் புண்ணிய பாராயணம் பண்ணுவார் விநாயகருடைய சரித்திரத்தை எங்கும் வாசிப்பார்கள் மேலும் ஸ்திரிஜாதிகள் ஜலக்கிரீடை மிகவும் செய்து ஜலத்தினுள் காலாட்டுவார்கள். அந்த ஜலக்கிரீடையினாலே ஸ்திரீகளினுடைய கண்கள் ரத்தம்போல் சிவக்கும். அப்போது துலுக்கருடைய தேசமெல்லாம் நாசமாகும்! துலுக்கர் பெரிய நகரமெல்லாம் மடிந்து போவார்கள். சனங்கள்மேலே ரத்தங்கள் கட்டி பேய பூனைகள் இவைகளால் சேதம்பண்ணும். எல்லோரும் துக்கித்து துலுக்கர் பாழாவார்கள் வீரபிர்மம் பிறந்த நாள் முதல்கொண்டு வரவரவாகி யவ்வனமதிகமாயிருக்கும், ஓய் ராமயோகிஜயரே, சிதம்பர தீக்ஷிதரே கேளுங்கள் மேலும் சகலமானபேரும் வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தைக் கேட்க மிகவும் இச்சிப்பார்கள், அமாவாசை நாளிலே ராத்திரி பூர்ணசந்திரன் உதயமாகும். அதனாலே சிலபேர்கள் நசித்துப்போவார்கள் ராத்திரியில் சூரியனுதயமாகும் ஆகாசம் சிகப்பாகும் பின்னும் ஆகாசம் செம்மணிபடும் அப்போது பெரியோர்கள் புண்ணிய புருஷர்கள் அஷ்டதிக்கும் மந்திரங்களை துதிசெய்வார்கள், மேலும் அஷ்டகஜமும் ஜலப்பிரளையம் வந்து நாசம்பண்ணும் பட்டணங்களிலேயும் ஊர்களிலேயும் க்ஷேத்திரங்களிலேயும் ரத்தமழை பெய்யும். அதனாலே சிறிது பேர்கள் நசிப்பார்கள் பட்டணம்ராசகளிலே லட்சுமிதேவி ஆக்கித்துபுவாள் அப்போது சமுத்திரங்களும் பொங்கும் அதனாலே துஷ்டர்கள் யவனர்சகர் முதலானவர்கள் நஷ்டமாவார்கள் வீரபிர்மம் வந்தாரோமென்று பணிதாசர்களுக்குக் கேட்கும்படியாய் பூமாதேவி சொல்லிவாழ்த்துவாள் பூலோகத்திலே முன் யுகங்களிலே எந்தப் பிரகாரம் சத்தியமாய் நடந்ததோ அந்தப்பிரகாரம் சிலைகளிலே சத்தியத்துடனே சகல ஜனங்களும் சம்பத்துவான்களாகி வாழ்திருப்பார்கள் இராமயோகிஜயரே சிதம்பரதீக்ஷிதரே, இந்தப்பால குமாரனாகிய வீரப்பிர்மம் இவ்விடம் வந்து ஆறுமாதமாயிற்று இன்னும் மூன்று மாதம் இவ்விடத்திலிருந்து அப்பால கேதாரவனத்திற்கு அவ்விடத்திலிருந்து ஸ்ரீசாம்பசிவமூர்த்தியைப் பூஜித்து இரண்டு வருடம் தவஞ்செய்து சிவனிடத்திலே மூன்று வரங்கள் பெற்றுக்கொண்டு குரோதனவருஷ சித்திரைமீ சுத்த பௌர்ணமி வியாழக்கிழமை இந்த சுபதினத்திலே இந்திரகிரி பர்வதத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கிற மகாதபோதனர்களையும் முனீஸ்வார்களையும். தெரிசித்து அவர்களுடைய அனுமதியும் பெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஸ்ரீகைலாச பர்வதத்திற்குப் போய் மல்லிகார்ச்சுன சுவாமியையுங்கண்டு தரிசித்து அவருடைய வனுமதி

யும் பெற்றுக்கொண்டு தரிசனஞ்செய்து கார்த்திகைவீரார்ச்சுனன் கையால் கங்கணம்கடசம் வாங்கிக்கொண்டு நாட்டெங்கும் போய் பெரியோர்களுடைய தரிசனம் பெற்றுக்கொண்டு பெரியவாடை யெனுமூருக்குப்போய் அவ்விடமிருக்கப்பட்டவர்களை தன்கை வசப்படுத்துக்கொண்டு கெங்காதீரம்போயச் சேர்ந்தவவிடத்திலிருந்து தர்ம ராஜாக்களுடைய சிம்மாஸன முத்திரையையுங் கைக்கொண்டு துஷ்டர்களை சம்மாரஞ் செய்து அக்ஷய வருஷம் போனவுடனே பிரபவ வருஷமுதற்கொண்டு ஏகசக்ர சிம்மாஸன முதலாக ராஜ்ஜிய பரிபாலனஞ்செய்யவருவார். அப்போது நாங்களுங்கூட வருவோம். இவர் ராஜ்ஜியபரிபாலனம் செய்கிறபோது மாதம் மூன்றுமழை பெய்யும். பயிர்கள் செம்மையாக விளையும் தர்மநீதி மிகுதியாக நடக்கும். ஜனங்கள் பாக்கியவான்களாக தர்ம சிந்தனையோடு வாழ்ந்து கொண்டிருப்பார்கள், ஓய் இராம யோகி ஐயரே சிதம்பரதீக்ஷதரே இது சங்கதிகளெல்லாம் எங்களுக்கு ஸ்ரீ சாம்பசிவமூர்த்தியே போதித்தபடியினாலே நாங்கள் உங்களிடத்தில் சொன்னோம் நீங்கள் எங்குமில்லாத புதுமையை கேள்விப்பட்டீர்கள் இதுகளை நீங்கள் ஓயாமல் பூலோகத்திலேசகலமான ஜனங்களுக்கும் அறிவித்து எழுதியனுப்பி பிரசங்கங்கள் செய்யுங்களென்று அந்தசாஸ்திரத்திலே பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கு எந்தப்பிரகாரம் செய்யவேண்டுமென்றால் தரித்திரமான ஊர்களிலே பொன்மாரி பொழிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தூரம் சந்தோஷத்துடன் பூமியுள்ள புண்ணிய புருஷர்களும் தரிசனத்துக்கு இருப்பார்கள் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர இந்த நான்கு வர்ணத்தாரும் அவர்களுடைய முறை தப்பாமல் சந்தோஷமாக இருப்பார்கள் என்று அந்த மகாத்துமாக்களாகிய முனீஸ்வரர்கள் எங்களுக்கு திருவுளம் பற்றினார்கள் சிதம்பரதீக்ஷதரும் இராமயோகி ஐயரும் நீங்களிருவரும் சொன்ன வார்த்தைகளுள்ளபடி நிசமென்றெண்ணி நடக்கின்ற பேர்களுக்கும் இந்த பத்திரிகையை வைத்து பூஜைபண்ணியவர்களுக்கும் ஆயிசுபரியந்தம் ஆரோக்கியமும் தனதான வஸ்துக்களும் வாகனாதிகளும் பெற்று சுகமாயிருப்பார்கள்.

இதை எழுதாமலும் படிக்காமலும் படித்ததை கேட்காமலும் அசட்டையாகி இகழ்ச்சிசெய்பவர்களுக்கும் துஷ்ட பாவிகளான ஜனங்களெல்லாம் அட்சய வருஷத்துக்குள்ளாக அதமாய்ப்போகும் படியாய் கஷ்டங்கள் சித்திக்கும் அவர்கள் வாயிலே கிருமிகளுண்டாகி அதினாலே அவதிப்பட்டு புண்ணியத்திற்காளாகாமல பாவத்திற்குள்ளாகிபோவார்கள். இதுவுமல்லாமல் கண்கூசின தண்டனை செய்ய கனகதுர்க்கையம்மாள் விசாரிக்கவருகின்சின் அதனாலேயும் ஜனங்கள் அதமாய்போவார்கள்.

சிதம்பரதீக்ஷதரே இராமயோகி ஐயரே நீங்கள் இவ்விடத்திலிருக்கப்பட்ட மகிமைகளெல்லாம் பார்த்தீர்களோ, இனிமேல் நீங்களிருவர்களும் தங்களுடைய ஆசிரமத்திற்குப்போய் இவ்விடத்திலிருந்து பூலோகத்திலிருப்பட்ட ஜனங்களுக்கெல்லாந் தெரியத்தக்கதாக மேலே சொல்லிய விபரங்களைக் குறித்து பத்திரிகையெழுதி அந்தந்த தேசங்களுக்கு அனுப்பிவித்து இனிமேலாகிலும் பாவங்களைச் செய்யாமலும் மேலான தர்மங்களைச் செய்து புண்ணியங்களையுந் தேடிக்கொள்ளும்படியாயும் இந்தப்படி நடந்துக்கொள்ளும் படியாய் தெரிவியுங்கள். பூலோகத்திலே துஷ்டர்களதிகாரத்துடாடியினாலே அவர்களைத்தண்டனை பண்ணவேண்டிய நிமித்தியமாய் போசராசாவண்டையில் சத்திபாகிய கனகதுர்க்கையம்மாள் உற்பத்தியாயிருக்கின்றாள் ஆனதால் நீங்கள் அந்த கனகதுர்க்கையம்மாளையும் பத்திரிகையிலெழுதி அந்தந்த தேசங்களுக்கனுப்பிவித்தா அதற்கனுகூலமாக நீங்களிருந்து துஷ்டர்கள் முதலானபேர்களையுந் தண்டனைபண்ணுவார்களென்று அறியும்படியாயச் செய்விக்கிறதென்று முனீஸ்வரர்கள் ஆக்ஞாபித்தபடியினாலே நாங்கள் அவர்களனுமதியைப் பெற்றுக்கொண்டு எங்களாச்சிரமத்திற்கு வந்து பூலோகத்திலிருக்கப்பட்ட புண்ணியபுருஷர்களுக்குத் தெரியவேண்டியநிமித்தம் இந்தப்பத்திரிகை எழுதயனுப்பினோம். அதை அந்த மச்சதேசத்தை துரைத்தனஞ்செய்யபட்ட துஷ்டாத்துமாக்கள் கண்டு எங்கள் பேரிலே சீற்றங்கொண்டு, நீங்கள் ஆங்காரமாய் முடிவுகாலம் வந்ததென்று பிரபல்யமாய் எழுதவேண்டியதென்னவென்றும் இந்தப்பத்திரிகையை எழுதினவர்கள் யாரென்றுங்கேட்டு எங்களைப்பிடித்துக்கொண்டு வரசொல்லிச் சில தூதர்களை எங்கள் ஆசிரமத்திற்கு அனுப்பினார்கள். அந்த தூதர்கள் எங்களையழைக்க நிஷ்டையிலே பார்த்து அந்த துஷ்டர்கள் மெத்தக்கோபமாயிருக்கிறார்களென்று தெரிந்து இவர்களுடன் பேசலாகாதென்று அவர்களோடு போனோம், அந்த துஷ்டர்கள் எங்களை கண்டமாத்திரத்தில் நீங்கள் யார், இப்பிரசாரமாக ஏன் எழுதினீர்கள். இந்த கலியுகத்திற்கு நீங்களாதெய்வம். கெடுவுண்டாகத் தேவேண்டிய காரணமென்னவென்று கேட்டதற்கு நாங்கள் எங்களுக்கு ஸ்ரீசாம்பசிவமூர்த்தி பிரசன்னமாகிவந்து சொன்னபடியினாலே இப்படிக்கு எழுதி அனுப்பிவைத்தோமென்று சொன்னோம். அப்படிக்கு உங்களிடத்தில் ஸ்ரீசாம்பசிவமூர்த்தி பிரசன்னமாகியிருந்தால் ஒருசோதனை பார்க்கிறோம். அதற்கு நீங்கள் நின்றால் எங்களுக்கு தெய்வந்தானென்று சொன்னார்கள் அதற்கு நாங்கள் சொன்னது உங்கள்மனதிருக்குளப்படிச் செய்யவேண்டியதோ அப்படிசெய்யலாமென்று சொன்னோம் அதற்கு மேல் அந்த துஷ்டர்கள் கருப்பருந்தை எடுத்து ஜோடி பீரங்கிக்குள் செலுத்தி குண்டு போட்டு கெட்டித்து எங்களை மேற்படி

பிரத்தியெதிரே நிருத்தி இனி உங்களுடைய மகத்துவத்தைப் பாருங்களென்று ஷை நீரங்கிவாயிற் றீயை கொளுத்தினார்கள் அப்போது இரண்டு குண்டுகளும் அக்கினி மயமாயெழும்பி எங்கள் கையிலே வந்திருந்தது அதை மேற்படி துஷ்டர்கள் கண்டு நடுநடுங்கி திகிலெடுத்து இவர்கள் எழுதினபடி நடக்குமென்று யோசித்து ஒதுங்கி விலகிப்போய் நின்றார்கள் அந்த சமயத்திலே மகா முனீஸ்வரர்களும் மகா சித்தர்களும் மகாயோகீஸ்வரர்களும் பிரசன்னமாகி வந்து ஒப் சிதம்பர தீக்ஷிதரே இராமயோகி ஐயரே உங்களை இந்த துஷ்டர்களுக்கு பகவானென்றும் கர்த்தாவென்றும் தெரியாமல் இந்த துஷ்டர்கள் மதத்தினாலே இத்தனை இம்சைப் பண்ணினார்கள் இவர்களுக்கு ஆகாதகாலம் சம்பவித்துக்கொண்டபடியினாலே இந்த துர்புத்தி வந்ததென்று சொல்லிப் போய்விட்டார்கள். ஆகையால், அக்ஷயவருஷம் போனதின் பிறகு பிரபவ வருஷம் முதற்கொண்டு வீரபிர்மம் பூமிக்கு அதிபதியாக இராச்சிய பரிபாலனஞ் செய்ய வருகிறார் அப்போது உங்களுக்கு அந்த விருத்தாந்தம் இன்பமாய் பகவத தர்மசிந்தனையாகவிருக்கப்பட்ட புண்ணிய புருடர்களுக்குத் தெரியும்படியாக மகாமுனீஸ்வரர்களும் மகா சித்தர்களும் ஆக்ஞாபித்தபடி நாங்கள் சகல தேசத்தற்கு எழுதி அனுப்புவித்திருக்கிறோம் அப்பாலுண்டான இரண்டாம் பத்திரிகை புண்ணிய புருஷர்களுக்கும் சிவசிந்தனையாயிருக்கப்பட்ட சிவனடியார்களுக்கும் க்ஷேத்திராந்தத்திலே எரிவு கண்டு இரத்தம் பிடிக்கும் இதற்கு பிரதி எழுதிக்கொண்டு பூஜை பண்ணின பேர்களுக்கு மனதிலே எந்தகாரியத்தை நினைத்துப் பூஜை செய்கிறார்களோ அந்தக காரியம் அவர்களுக்கு சித்தியாகும் ஆகையால் இதை உள்ளபடிதானென்று நடக்கிற பேர்களுக்கும் மகா தர்ப்பணம் பண்ணினபலன் கிடைக்கும் இதற்கு சந்தேகமில்லை. மேற்கண்டபடிக்கு பிரபவ வருடத்தில் வீரபிர்மம் அவர்கள் வந்து இராச்சிய பரிபாலனம் பண்ணுவார்கள் இந்த பத்திரிக்கையை நிச்சயமென்றெண்ணி நடக்கவேணும் நாங்களிரண்டுபேரும் தேசங்களுக்கு பிரவேசிக்கிறோம் இந்த பத்திரிகையை பார்த்துக்கொண்டுவந்து கொடுக்கின்றார்களோ அவர்களுக்கும் வாசிக்கின்றவர்களுக்கும் ஜோடி வஸ்திரமும் சொர்ணபுஷ்பமுங்கொடுத்தால் அவர்களுக்கு இரட்டிப்பு தங்களுக்கு உற்பத்தியாயிருக்கும்படியாய் ஸ்ரீசாம்பசிவமூர்த்தி கட்டளைப்பண்ணுவார்,

இதை எழுதினபோகம்; வாசித்தபேரும், கேட்டபேரும், நிச்சியமென்றெண்ணி பூஜித்தபேரும், இந்தப் பத்திரிகையை நம்பினவரும் இவர்களெல்லோரும் தீர்க்காயுசுடையவராயும் அம்பாசுக்காராயிருந்தாலும் நாங்கள் வருகிறபடிக்கும் சுகமேயிருப்பார்கள் மேற்கண்டபடி போற்றுவர்களை எமன் அணுகவும், எமன் கோட்

டாலே செய்யவுங் கூடாது. சகல சம்பத்துகளும் உண்டாகியிருக்கும். ஸ்ரீசாம்பசிவமூர்த்தியும் துணைசெய்வார் விதர்ப்பதேசத்தைச் சேர்ந்த மல்லிகார்ச்சுனபுரத்திலிருக்கும் அருணாசலசெட்டியானவர் கப்பல்வியாபாரங்கொண்டு கடலேறி போகும்போது கப்பலை சுழல்காற்று அடித்துக் கொண்டுபோய் புட்பகத்தீவுக்கப்பாலே போய் சேர்ந்திருக்கிறபோது அந்த புட்பகதீவில் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகள் சனாதர்கள், முனிவர்கள், தும்புருநாரதர்களுள் அனந்தங்கோடி சித்தர்கள் முதலான திருச்சபைகூட்டமாக தம்புரு வீணை சுரமண்டலம் சங்கு ஜயகண்டி, சேகநாதங்கள், தேவதுந்துபிகள முழங்க வேதவாக்கியத்துடன் பாரிஜாத புட்பம் சாதவழிக்கு கமகமவென்று வாசனைவீச இப்படி ஆரவாரத்துடன் சமுத்ரமுழக்கம்போல் அரகரா என்றசப்தமும், "ஹரி ஓம் நமோ நாராயணா" என்ற சப்தமும், தொனிக்க பரிபூரணகடாக்ஷக் கிருபையுடன் சம்பிரபமாயிருக்கிற அத்திருக்கூட்டத்தின் அதிசயங்களைப் பார்த்துக்கொண்டுநிற்க, அந்தயோகிஸ்வரரில் ஒருவர் இக்கப்பலருகில் வந்து அது யாரடா கப்பற்காறனென்று கேட்க: அருணாசலம்செட்டி சொன்னதாவது! ஸ்வாமி அடியேன் விதர்ப தேசத்தைச்சார்ந்த மல்லிகார்ச்சுனபுரத்திலுள்ள வைசிய குலம், அடியேன் பெயர் அருணாசலஞ்செட்டியென சொல்ல, அந்த யோகீஸ்வரர் அடா பாவிடா, நீ இங்கு வரவொண்ணாதென அவரைப்பணிந்து ஸ்வாமி அடியேனது கப்பலை சுழல்காறது இங்கு கொண்டுவந்து விட்டதென அருணாசலஞ்செட்டிசொல்ல அவர் நீ வந்தபடியே கப்பலைக்கொண்டுசெல், உன்னிடத்தில் ஒரு காரியமும் சொல்லப்படாதென யோகீஸ்வரர் சொல்ல, அவரை அருணாசலஞ்செட்டி மிகவும் பயபக்தியாக வணங்கி சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு வினவ யோகீஸ்வரர் ஒருவசனம் திருவுளம் பற்றினர். இந்த புட்பகத்தீவில் திருமூர்த்திகளும், தேவர்களு மிருக்குமிடத்தில் நீ கால் நாழிகை தரிக்கபடாது, சாபம் வந்துசித்திக்கும், அது எதினாலென்னில் பரமரகசியம் சொல்லப்பட்ட இடம், ஆனால் நீ இவ்விடத்திற்கு வந்தபோதே பூர்வஜென்மத்தில் வைசியர் குலத்தில புண்ய புருஷனாயிருந்தபடியினால் உன்னிடத்தில் உள்ள காரியஞ் சொல்லப்படுமென்று யோகீஸ்வரர் உளமகிழ்ந்து கனிவாய்திறந்து திருவுளம் பற்றியருளிய தென்னவென்றால்:

ஆதிமூலமாகிய நாராயணமூர்த்தி கலியுக அவதாரமாய் ஸ்ரீமந் வீரப்பிரமமும், இராஜயோகி ஐயரும், சிதம்பர தீக்ஷதருமாகத் தேவர்கள் கூட்டத்துடனே இந்த புஷ்பக வனத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். இனிமேல் சிலநாட்சென்றதின் பிறகு பூலோகமெல்லாம் ஒரு குடையின் கீழாக ஆம்லொரு கடமைகொண்டு

அசையாமணியுங்கட்டி செங்கோல் செலுத்தி பூமியாளும்படி ஜெயம்பெற்று வாழ்வார்கள், அப்போது பூமியெல்லாம் புஷ்ப மாரியாகவும் பெய்யும். புலியும் பசுவும் ஒருதுறையில் நின்று தண்ணீர்குடிக்கும். ஆயிரத்தெட்டு சிவாலயங்களும் நூற்றெட்டு திருப்பதியும், பிர்மாலயங்களும், குருவாலயங்களும், அன்னசத்திரங்களும, வீரசிம்மாசனத்துக்குடைய பஞ்ச மகுடத்திற்குச சேர்ந்த அறுபத்திநாலு சிம்மாசனாதிபதிபட்டங்களும் மென்மேலும் விருத்தியாகி நன்றாய் விளங்கும், அப்போது இந்த பூமியில் நடக்கிற நடத்தையெல்லாம் அந்த சுவாமிகள் திருவுளத்திலே தெரிந்து உத்தரவான திருவுளப்பிரசாதமென்னவென்றால் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்கிற குலாசாரமுந் தப்பி, அவர்கள் வேதமார்க்கமுந் தப்பி மாதா பிதா குருவென்கிற சத்தியமுந் தப்பி, அவர்கள் குரு ஒரு சிஷ்யனும் சிஷன் ஒரு குருவாகவும் ராஜா ஒரு சேவகனாகவும். சேவகன் ஒரு ராஜாவாகவும், மேல் கீழாகவும். கீழ் மேலாகவும், அவசத்தியமும் அனியாயமும். புருஷன் ஒரு பெண்ஜாதியாகவும், பெண்ஜாதி ஒரு புருஷனாகவும் மெய் பொய்யாகவும், பொய் மெய்யாகவும், கொலை, களவு, கள் காமம், குருத்துரோகம், இப்படி பஞ்சமா பாதகமும் மிகுந்து பூமியெல்லாம் சமன் மூடிப்போயிருக்கிறதென்றும், இதுவெல்லாப் சங்காரஞ் செய்யத்தக்கதாக பிர்மதேவனும் வேதாளத்தைவிட்டும் கொள்ளைக்காச்சலை விட்டும், சிலது பாலிய ஜனங்களைச் சங்காரஞ் செய்து வெகுதானிய வருஷம் காளியைவிட்டுக் காவுகொள்ளும்படியாய் விஷபேதியை விட்டார் இனிமேல் துர்க்காயியை விட்டு பலவித நோய்கண்டு ஜனங்கள் மடிந்துபோவார்கள். இந்தமூன்று பேர்களால் அஞ்ஞான இருட்டுகளெல்லாம் நீங்கி வெளிச்சமாகும்படிக்கு இந்த மூன்று மந்திரங்களாலே துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள். பின்னும் மூன்றுபேரும் திரிபுரத்தைத் தகனஞ்செய்ததுபோல் அவசத்தியத்தை அழித்து சத்தியத்தை நிலைநிறுத்தி, சர்வபரிகாரஞ்செய்து, சுவாமிகளிடத்தில் மூன்றுபேரும் வந்துசேர்ந்த பாத்திரத்துலே சுவாமிகள் பூமியாளும்படிக்கு வருவார்கள். மாதம் மூன்று மழை பெய்யும் அப்போது புண்ணிய புருஷர்களாயிருக்கிறபேர்கள் சுவாமிகளின் பாதாரவிந்தம் தரிசனம் காண்பார்கள். இச்சங்கதியைப் பூமியெல்லாம் அறியப்படுத்திவையென்று சொல்லிவிட்டு மாய்கையாய் திருக்கூட்டத்திலே போய்ச்சேர்ந்தார்.

பிற்பாடு அருணாஜலஞ் செட்டியானவர் கப்பலை நடத்திக்கொண்டு வெகுநாளைக்குப்பிறகு பல்கிகார்ச்சுனபுரத்திற்கு வந்துசேர்ந்தார் அப்போது இந்த வர்த்தமானங்களெல்லாம் விதர்ப்ப தேசத்து ராஜாகேட்டு அருணாஜலஞ் செட்டியாரை வணங்கிவேண்டிய சங்

தோஷம் செய்து துதித்து சுகமேயிருந்தார்கள். இதுவிஷயங்களை
தேசதேசங்களுக்கும் எழுதி அனுப்புவைத்து தானும் அந்ததேச
த்தாரும் சேமவரம் விரதமிருந்து சுவாமி பத்திரிகையை
வைத்து அர்ச்சனை செய்து வருகிறார்கள். இந்தப் பத்திரிகையை
பொய்யென்று சொன்னபேர்களும், இதை இகழ்ச்சி செய்தபேர்
களும் கங்கைக்கரையில் காராம் பசுவையும் மதா, பிதா, குருக்
களையும் கொன்ற தோஷத்திலே போவார்கள். இதை மெய்யென்று
மனதிலெண்ணி பூஜை அர்ச்சனை செய்தபேர்கள் லோகரக்ஷகராகி
ய ஸ்ரீவீரபிரமத்தினுடைய பாதாரவிந்தம் பெற்று சகல சம்பத்
துடனே வாழ்ந்திருப்பார்கள். இது நிச்சயம். சுபம். சுபம்.

## ஸ்ரீவீரபோகவசந்தராய நம!

ஸ்ரீ காரணவஸ்துவாகிய பரத்வாஜ ரிஷியினுடைய ஆச்ரமத்திலிருக்கும்
ஸ்ரீவீரபிர்மம் அவர்கள் திருமுகம் சுவாமி சாஸ்திரியாகிய ...
சிம்மாச்சாரியார் விகாரிவருஷபிறந்த பலன்களுக்கும் பஞ்சத்திற்...
மதியாக எழுதியனுப்பித்த நிரூபம் துந்துபிவருஷ வைகாசிமீ ...
ரம் பூராடநக்ஷத்திரம் திரயோதசிகூடின சுபயோக சுபதினத்தில் ...
மஹரிஷியினுடைய ஆச்ரமம்போய்ச் சேர்ந்தோம் அங்கே அகோ...
ளுண்டு அந்தவனத்திலே மகா முனீஸ்வரர்களும் சித்தாதிகளும ...
அவர்களைக்கண்டு தரிசித்தோம். அவர்சமூகத்திலே பதினொரு ...
குமாரனுகிய மகாமூர்த்தியாய் விளங்கியிருக்குமிவர் யாரென கே...
அங்கேயிருக்கிற மகாத்துமாக்கள் சொன்னது. இந்த பாலகுமாரன் ...
வருஷத்திலே பூமியாளுகிறதற்கு ஸ்ரீமந் நமோ நாராயண மூர்த்தியினு...
அம்சையுடையவராக யிருக்கிறார். காஸ்மீரமென்கிற மகா தேசத்தில் ஜெ...
து என்ற க்ஷத்திரிய ராஜாவினுடைய தேவியானவள் மகா சௌந்திரிய சௌ
பாக்கியத்துடனே மகா பதிவிரதையாயிருக்கின்ற திலர்தமையம்மாள் வயற்
றிலே உற்பத்தியாகிப் பிறந்தவர் இந்த புண்ணியபுருஷர் அதர்வண வேத
முதலான சகல சாஸ்திர வித்தைகளும் கற்றறிந்தவர். அவரிவ்விடத்திலே
மூன்று வருஷமிருப்பார். அதற்கப்பால் கேதார வனத்திலே இரண்டுமாதம்
அன்னம்புசிக்காமல் தபசு செய்து ஸ்ரீசாம்பசிவமூர்த்தியினது அனுக்கிரஹத்தை
யடைவாரென்றும் பின்னும் மூன்று வரங்கள் வாங்கிக்கொண்டு அங்கேயிருந்து
குரோதன வருஷம் சித்திரைமாதம் பூர்வபட்சமும் குருவாரமும் கூடின சு...
தினத்தில் இந்திரநீல பர்வதத்திற்கு போய் அங்கேயிருக்கிற மகா முனீஸ்வரர்
களைக்கண்டு தரிசனம் செய்துகொண்டு அவர்களருகில் காத்திருந்து சிறிது
வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு தெய்வமந்திரங்களையும் உபதேசம்
பண்ணிக்கொண்டு மல்லிகார்ச்சன சுவாமியைச்கண்டு தரிசனம்செய்து அவரண்
டையில் சிலநாள் கழித்து துற்கையினிடத்தில் அனுமதி பெற்றுக்கொ...
நங்கள் வம்சத்தாராகிய தர்மராஜாக்கள் பட்டணத்திலே போட்டிருக்கிற

## விகடஞான சங்கம் திருச்சி

### ரெணபுடிங்கிரிஷியால் கணிக்கப்பட்ட
### நான்கு ஜோல்கேட்டுக்கு உள்பட்ட டவுன்களுக்கு ஏற்பட்ட
### விகட வாக்கிய ரத்தாக்ஷிவருடத்தின் பலாபலன் வெண்பா.

ரத்தாக்ஷியில் மழை நலமாகப் பொழிந்திட்டாலும்
நத்தமுதல் தான்யம் சயத்திடா—இத்தரையில்
மாதே மூர்க்கமிகும் முனிசிபபால்டியால்
தீதெல்லாயுமெனத் தேர்

ரத்தாக்ஷியில் ராஜநெறி நலந்தரா சீர்திருத்தம்
விளைசசல் மலிந்திடாதிவ் வருடம்
ல் குடிகளுக்கும் பார்முனிசிப்பால்டிக்கும்
புந்திருப்பா மொழி.

ரியு மதிகரிக்கும் வாய்தாவுந் தான்பெருகும்
உரிய் சுதந்திரத்தை ஓட்டுதற்குப்--பெரிய
சட்டம் பிறந்திடுமே சதிசெய்யு முனிசிபால்டி
கிட்டிவந்த ரத்தாக்ஷி யால்

ஆலகாலவிஷம் முனிசிப்பால்டிவரிகள்
ஆற்றுடன்பெருங்காற்று பில்கலெக்டர்
கோலமாமகம் சேர்மன் நடவடிக்கைகள்
கொல்லும்வெங்கைபுலி நம்கவுன்சலர்கள்
காலனூர்விடுந்தூதர் வார்டுஇனிஸ்பெக்டர்
காட்டில்வாழ்தேள் பாம்பு பில்லேசேவகராம்
பொல்லாதடவுனிலேவாழும்போர்கள் சுடுகாடு
போகுமட்டுமிவர்களால் துன்பந்தானே

### காலவுரு காலத்துக்கேற்ற சர்பத்துகள்

கற்பூராதி சர்பத் முதல்தரம் கப் 1க்கு அணா 2
இரண்டாந்தரம் அணா 1
இஞ்சிசர்பத் அணா 1 2 ந்தரம் பை 6
மிளகு சர்பத் பை 6 ஓம சர்பத் பை 6
சீதபேதிக்கிதுபேதிவேளை பிணிநிவர்த்தியாக கப் அணா 4

வாசுதேவக்கோனார் ஷாப்புக்கடுத்த சர்பத்துக்கடை
நா. கதிர்வேலுபிள்ளை திருச்சி